## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குன்னூர்

**OS.No. 97/2015 DW –1 நாள்– 09.10.2025.**

**பெயர்: ராம்சுந்தரம்**

**<u>மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர். சாட்சி ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>**

**1.** நான் இத்தாவாவில் 3ம் பிரதிவாதி ஆவேன். இவ்வழக்கின் முதல் பிரதிவாதி சர்வே எண் 139/8 சி, 9, 10ல் உள்ள பூமியை எனக்கு விற்றவர் ஆவார். மேற்சொன்ன 3 சர்வே எண்களில்தான் எனது வீடு இடம்பெற்றிருக்கிறது என்பதற்கு ஆதாரமாக ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் செய்திருக்கிறேன்.

**2.** முதல் பிரதிவாதிக்கு எவ்வாறு அந்த நிலம் கிடைக்கப்பெற்றது என்றால் முதல் பிரதிவாதியின் தந்தை முதல் பிரதிவாதிக்கு தான செட்டில்மென்ட் எழுதிவைத்தார். நான் முதல் பிரதிவாதியிடமிருந்து கிரையம் பெற்ற சொத்திற்கும் இவ்வழக்கு சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் இரண்டும் பக்கத்தில் உள்ளது.

**3.** வாதி இவ்வழக்கை எதற்காக தாக்கல் செய்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. எனது முதல் விசாரணையில் நான் சர்வே எண் 139/10ல் மட்டும் தான் குடியிருப்பதாக கூறியிருக்கிறேன் என்றால் சரிதான். நான்தான் இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையரை நியமிக்க இடைக்கால மனுவை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

**4.** எனக்கு பாத்தியப்பட்ட சொத்தானது 139/10ல் மட்டும் தான் உள்ளது என்றாலும் வேறு எந்த சர்வே எண்களிலும் இல்லை என்றாலும் சரியல்ல. சாலையிலிருந்து எனது வீட்டிற்கு செல்வதற்கு வாதிக்கும் பிரதிவாதிக்கும் ஒரே நடைபாதை தான் என்றால் சரிதான். எனது வீட்டிற்கு

மேல் படிகட்டுக்கு அருகில் ஒரு கதவு உள்ளது அது வழியாக போக வழி இருக்கிறது என்றால் வழி இருக்கிறது ஆனால் அது என்னுடையது அல்ல.

**5.** நான் எனது மனைவி முதல் பிரதிவாதியிடமிருந்து வழக்கு சொத்தை வாங்கும்போது நடைபாதை எங்குள்ளது என்று தனியாக குறிப்பிட்டு ஆவணத்தை ஏற்படுத்தி கொண்டேனா என்றால் இல்லை. எனக்கு அவ்வாறு அங்கு நடைபாதையே இல்லை என்றாலும் வாதியை தொந்தரவு செய்யதான் அந்த பாதையை பயன்படுத்தி வருகிறேன் என்றாலும் சரியல்ல.

**6.** எனது மனைவி முதல் பிரதிவாதியிடமிருந்து வழக்கு சொத்தை கிரையம் பெறும்போது அவர் சரியான நிலையில் இல்லாத காரணத்தினால் அவசரமாக கிரைய ஆவணத்தை ஏற்படுத்திக்கொண்டதனால் நடைபாதையை பற்றி தெளிவாக அதில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. வாதி எனக்கு வீட்டினருகில் மற்றொரு வழி இருந்தும் நான் வாதியை தொந்தரவு செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு வழக்கு சொத்தை பயன்படுத்தி வருகிறேன் என்று கூறுவது சரியல்ல.

**7.** திரேஸம்மாள் என்பவர் எனக்கு என்ன வேண்டும் என்றால் எனது பூமிக்கு பக்கத்தில் பூமி வைத்திருப்பவர். அவர் 95/2015 என்ற அசல் வழக்கு ஒன்றை என்மீது தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 95/2015 க்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல, சம்பந்தம் இருக்கிறது. திரேஸம்மாள் மற்றும் இவ்வழக்கின் வாதி இருவரும் சேர்ந்துதான் மேற்சொன்ன வழக்கை தாக்கல் செய்தார்கள்.

**8.** முதல் வாதியின் தந்தை பெயர் ஜெபமாலை. ஜெபமாலைக்கு சொந்தமான பூர்வீக சொத்திலிருந்து தான் அங்குள்ள அனைவரும்

கிரையம் பெற்றார்கள் என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளிற்கிணங்க மறுதேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)**

R HIMAKRITI

Digitally signed by R HIMAKRITI
Date: 2025.10.09 16:55:16 +0530